# அரசுத் தேர்வுகள் இயக்ககம் – சென்னை – 6

## மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்வு –2022

## பகுதி I - பொதுத்தமிழ் – விடைக்குறிப்புகள்

**விடைத்தாள் மதிப்பிடும்போது கீழே குறிப்பிட்டுள்ள வழிமுறைகளைத் தவறாது பின்பற்றுதல் வேண்டும்.**

1. நீலம் மற்றும் கருப்பு மையினால் எழுதப்பட்டுள்ள விடைகள் மட்டுமே மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.
2. விடைகள் சொந்த நடையில் தெளிவாக அமைந்து தொடர்பிழை, சொற்பிழை, எழுத்துப்பிழை, ஒற்றுப்பிழை, இலக்கணப் பிழையின்றி இருப்பின் முழுமதிப்பெண் வழங்குதல் வேண்டும்.
3. எழுத்துப்பிழை, ஒற்றுப்பிழை, இலக்கணப்பிழை ஒவ்வொன்றிற்கும் கால் மதிப்பெண் வீதம் குறைத்து, அவ்வாறு குறைக்கும் மதிப்பெண் எக்காரணம் கொண்டும் வினாவிற்குரிய மதிப்பெண்ணில் நான்கில் ஒரு பங்கிற்கு மேல் மிகாமல் இருத்தல் வேண்டும்.
4. தவறான விடைகளைக் (X) குறியிட்டும், தொடர்பிழைகளை அடிக்கோடிட்டும், ஒற்றுப்பிழைகளைக்(^) குறியிட்டுக் காட்டியும் விதிப்படி அவற்றிற்குரிய மதிப்பெண்களைக் குறைத்தல் வேண்டும்.
5. மதிப்பெண் வழங்கப்படுகின்ற ஒவ்வொரு சரியான கருத்திற்கும் தனித்தனியே குறியிடுதல் வேண்டும்.
6. மிகையாக விடையிருப்பின் ‘மிகை’ என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.
7. ஒரே விடை மீண்டும் எழுதப்பட்டிருப்பின் ‘மீண்டும்’ என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.
8. கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுத வேண்டும். இல்லையெனில் மதிப்பெண் வழங்கப்படமாட்டாது.
9. வினா எண் குறிப்பிடாத விடைகளுக்கு மதிப்பெண் வழங்குதல் கூடாது.

## பகுதி – I

**மொத்த மதிப்பெண்கள் 90**

| வ. எண் | விடை | மொத்த மதிப்பெண்கள் |
|---|---|---|
| I | **அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** | **14 X 1 = 14** |
| 1 | (அ) (ii), (iv) அல்லது (ஈ) (i), (iv) | 1 |
| 2 | ஆ) உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே. | 1 |
| 3 | இ) நாவைக் காக்காதவர். | 1 |
| 4 | அ) ஊருக்கு உதவுவது. | 1 |
| 5 | அ) உமறுப்புலவர். | 1 |
| 6 | ஈ). (1) - (iii), (2) - (i,) (3) - (iv), (4) - (ii). | 1 |
| 7 | அ) ஏ.ஆர். இரகுமான். | 1 |
| 8 | அ) நல்லாடை. | 1 |
| 9 | ஈ) கடல் + அலை – உயிர் + மெய். | 1 |
| 10 | அ) ஜெயமோகன். | 1 |
| 11 | ஆ) சாழல் | 1 |
| 12 | இ) உரிச்சொற்றொடர். | 1 |
| 13 | அ) புத்தக மதிப்புரை | 1 |
| 14 | ஈ) நீந்துவது. | 1 |

## பகுதி – II

**பிரிவு – 1 எவையேனும் மூன்றனுக்கு விடை தருக** **3 X 2 = 6**

| | | |
|---|---|---|
| 15 | **மருந்து**– பெருந்தகையாளனிடம் உள்ள செல்வம்<br>**மருந்து மரம்** – பெருந்தகையாளன் | 1<br>1 |
| 16 | நாங்கூழ்ப்புழு (மண்புழு) | 2 |
| 17 | **காய்த்தது** –திண்ணிய வலிமை நல்கும் வெற்றி, குறைவற்ற ஊக்கம்<br>**பழுத்தது** –தீன் எனும் செல்வம் | 1<br>1 |
| 18 | **ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின**<br>➢ மரங்கள் வெட்டப்பட்டன<br>➢ மழை பெய்யவில்லை<br>➢ மண் வளம் குன்றியது<br>➢ இயற்கைச் சூழலில் பல மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டதால், வாழ்வதற்கான சூழல் இல்லாததால் குருவிகள் எங்கெங்கோ தம் இருப்பிடம் தேடி அலைந்தன. | 1/2<br>1/2<br>1/2<br>1/2 |

**பிரிவு – 2**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 X 2 = 4**

| | | |
|---|---|---|
| 19 | **'நாழிக்குள் திணிக்கும் மருந்து போல்' :**<br>➢ இரண்டு கைப்பிடி விசயத்துடன் மேடை ஏறுவார்.<br>➢ வெடிமருந்துக்கு நெருப்பு வைத்ததும் பச்சை, மஞ்சள், சிவப்பு எனக் குடைகுடையாய் உதிர்வதுபோல, மாலைமாலையாய் இறங்கி வரும் கருத்து வர்ண ஜாலம் அறிந்தவர் ஜீவா என்பதைத் தெளிவுபடுத்த இவ்வுவமை கூறப்பட்டுள்ளது. | 1<br>1 |
| 20 | **'கோட்டை' என்னும் சொல், திராவிட மொழிகளில் பின்வருமாறு எடுத்தாளப்பட்டுள்ளது.**<br>➢ தமிழ் – கோட்டை, கோடு<br>➢ மலையாளம் – கோட்ட, கோடு<br>➢ கன்னடம் – கோட்டே, கோண்டே<br>➢ தெலுங்கு – கோட்ட<br>➢ துளு – கோட்டே<br>➢ தோடா– க்வாட்<br>**(எவையேனும் நான்கு எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 2 |
| 21 | **தமிழ் மொழியில் 'வரை' என்ற சொல்**<br>➢ கோடு, மலை, சிகரம், விளிம்பு, கரை, எல்லை, நுனி போன்ற பொருள்களில் பயன்படுத்தப்படுகின்றது.<br>**(எவையேனும் நான்கு எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 2 |

**பிரிவு – 3**

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7 X 2 = 14**

| | | |
|---|---|---|
| 22 | **உயிர்முதல், மெய்ம்முதல்**<br>**உயிர்முதல்**<br>➢ வருமொழியின் முதல் எழுத்து உயிரெழுத்தாக இருந்தால் அது 'உயிர்முதல்' எனப்படும்.<br>➢ சான்று: வாழை + இலை = வாழையிலை<br>**மெய்ம்முதல்**<br>➢ வருமொழியின் முதல் எழுத்து உயிர்மெய்யாக இருந்தாலும் அதன் முதலில் நிற்கும் வடிவம் மெய் என்பதால் அது மெய்ம்முதல் எனப்படும்.<br>➢ சான்று: தமிழ் + நிலம் = தமிழ்நிலம் (ந் + இ)<br><br>**(பொருத்தமான சான்று இருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)** | 1<br><br>1 |

| | | |
|---|---|---|
| 23 | **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**<br>**அ) செங்கயல் – செம்மை + கயல்**<br>விதி 1 – ஈறுபோதல் **(செம் + கயல்)**<br>விதி 2– முன்நின்ற மெய் திரிதல் **(செங் + கயல்)**<br><br>**ஆ) இயைவதாயினும் – இயைவது +ஆயினும்**<br>விதி – **1.** உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்<br>**(இயைவத் +ஆயினும்)**<br>விதி – **2.** உடல் மேல் உயிர்வந்தொன்றுவது இயல்பே<br>**(இயைவது +ஆயினும்)**<br>(பிரித்து எழுதுதல் – 1 மதிப்பெண்<br>விதி – 1 மதிப்பெண்) | 2 |
| 24 | **பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**<br>i) தேர்வு எழுதுவதற்கு வேகமாகச் (விரைவாகச்) செல்லுங்கள், நேரம் கடந்து சென்றால் பதற்றமாகிவிடும் / பதற்றமாக இருக்கும்.<br>ii) முயற்சி செய்தால் அதற்கேற்ற பலன் வராமல் போகாது. | 1<br><br><br>1 |
| 25 | கனை – கணை<br>**போரில் வீரர் எய்த கனை பட்டதும் குதிரை கணைத்தது.**<br>**(பொருத்தமான தனித்தனித் தொடர்கள் எழுதியிருப்பினும் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 2 |
| 26 | தங்கை<br>தம் கை உள்ளவரை தங்கைக்கு உதவ வேண்டும்<br>**(பொருத்தமான தனித்தனித் தொடர்கள் எழுதியிருப்பினும் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 1<br>1 |
| 27 | **தமிழ்க் கலைச்சொல்**<br>அ) மனக்கிளர்ச்சி / உணர்ச்சி / மிகுஉணர்ச்சி<br>ஆ) கூட்டு உடற்பயிற்சி / பெருங்கூட்டுப் பயிற்சி<br><br>**குறிப்பு – செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா**<br>**பகுபத உறுப்பிலக்கணம் தருக**<br>உண்டான் – உண்+ட்+ஆன்<br>உண் – பகுதி<br>ட் – இறந்தகால இடைநிலை<br>ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி<br>(பிரித்து எழுதுதல் – 1 மதிப்பெண்<br>உறுப்பிலக்கணம் – 1 மதிப்பெண்) | 1<br>1<br><br><br><br>2 |

| | | |
|---|---|---|
| 28 | **விடைகேற்ற வினா**<br>➢ சிறுகதை, புதினம், விமர்சனம், கவிதை, மொழிபெயர்ப்பு முதலாக இலக்கியத்தின் பல்வேறு தளங்களில் பங்களிப்பைச் செய்தவர் யார் ?<br>**(அல்லது)**<br>➢ சி.சு.செல்லப்பா இலக்கியத்தின் எந்தெந்தத் தளங்களில் பங்களிப்பைச் செய்திருக்கிறார் ?<br>**(பொருத்தமான வினா அமைத்திருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 2 |
| 29 | அ) அச்சடித்திருக்கும் எழுத்தையோ சொல்லையோ நீக்குக.<br>ஆ) இரட்டை மேற்கோள் குறியீடு இடுக. | 1<br>1 |
| 30 | **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுதல்.**<br>➢ குமரனைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமா ? என் வீட்டிற்கு வருகை தாருங்கள். என் வீட்டிற்குப் பக்கத்து வீடுதான் குமரனது வீடு. | 2 |

**பகுதி – III**

**பிரிவு –1**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 X 4 = 8**

| | | |
|---|---|---|
| 31 | **புறநானூற்றுப் பாடலின் கருத்திற்கு இணையான குறட்பாக்கள்**<br>➢ விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று. (82)<br>➢ அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில். (428)<br>➢ தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தல் பொருட்டு. (212)<br>➢ பண்புடையார் பட்டுண்டு உலகம் அதுவின்றேல் மண்புக்கு மாய்வது மன். (996).<br>➢ கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது தூக்கங் கடிந்து செயல். (668).<br>➢ வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய வாழ்வாரே வாழா தவர். (240).<br>**(பொருத்தமான இரண்டு குறட்பாக்கள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 4 |

| | | |
|---|---|---|
| 32 | **புகழுக்குரிய பண்புகள்**<br>அன்பு, அடக்கம், இரக்கம், அறிவு, கொடை, வீரம், வாய்மை, பொறுமை போன்ற பண்புகள். **(இவை போன்ற பண்புகள் எவையேனும் மூன்று இருப்பின் மதிப்பெண் வழங்கலாம்.)**<br>**புகழுக்குரிய பெருமைகள்**<br>➢ இணையற்ற உயர்ந்த புகழைப்போல உலகத்தில் ஒப்பற்ற ஒன்றாக நிலைத்து நிற்பது வேறொன்றும் இல்லை.<br>➢ தோன்றினால் புகழ் தரும் பண்புகளுடன் தோன்றுக. இல்லையெனில் தோன்றாமல் இருப்பதே நல்லது.<br>➢ பழியில்லாமல் வாழ்பவரே வாழ்பவர்; புகழில்லாமல் வாழ்பவர் வாழாதவர். | 2<br><br>2 |
| 33 | **உயர்தமிழை உயிர்என்று போற்று மின்கள்!**<br>**இடம் :** கொலைக்களத்தில் திரண்டிருந்த பொதுமக்களிடம் உதாரன் உரைப்பது<br>**பொருள் :** மாசில்லாத உயர்தமிழை உயிரைப்போலப் போற்றுங்கள்!<br>**விளக்கம் :** வேந்தன் தன்னை அழைத்ததற்கும் அமுதவல்லி காதலித்ததற்கும் தமிழே காரணம். என் உயிர் போவதற்கும் தமிழ்தான் காரணம் என்று நினைத்துவிடக்கூடாது. என் அன்னைத் தமிழுக்குப் பழிவந்தால் என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது. எனவே மாசில்லாத தமிழை உயிர்என்று போற்ற வேண்டும் என்று வேண்டிக் கொண்டான். | 1<br><br>1<br><br>2 |
| 34 | **வாய்க்காலின் சிறப்புகள்:**<br>➢ நமக்கு உணவு வழங்கப் பயன்படும் வயல். அதற்கு உதவும் வாய்க்கால் செய்கின்ற தொழில் வியப்பானது.<br>➢ கடலை மலையாகவும் மலையைக் கடலாகவும் புரட்டிப் போடுவதற்காக இந்தச் சிறு வாய்க்கால் ஓடுகின்றது.<br>➢ இச்சிறு வாய்க்கால் சூரியனின் கட்டளையால் ஆவியாகிப் பின்னர் மலையாகவும் அருவியாகவும் சுனையாகவும் ஊற்றாகவும் மாற்று வடிவம் கொள்கிறது.<br>➢ மீண்டும் மீண்டும் வேகமாக எழுந்து தன் வழக்கமான பயணத்தை இரவுபகல் பாராமல் தொடர்கிறது.<br>➢ வாய்க்காலைப் போல் ஊக்கத்தோடும் உறுதியோடும் உழைப்பவர் எவரும் இலர்.<br>**(எவையேனும் நான்கு கருத்துகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 4 |

பிரிவு –2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 X 4 = 8

| | | |
|---|---|---|
| 35 | **ஜீவாவின் பேச்சு நடை:**<br>❖ பேச்சுக்கலை அவர் பெற்ற வரம்.<br>❖ பேசும்போது வெளிப்படுத்தும் உத்திகளும் பேச்சை அமைக்கும் அழகும் வெகுநூதனமாகவும் நளினமாகவும் இருக்கும்.<br>❖ பேச்சுக்கலையின் விதிகள் கூறும் பாடப்புத்தகங்களைக் காலடியில் போட்டு மிதித்தவர்.<br>❖ அவருடைய பாணி இரவல் பாணி அல்ல; கற்று அறிந்ததும் அல்ல.<br>❖ செய்திகளைக் கலைநோக்கோடு அணுகிக் கற்பனையும் கலந்து நாளடைவில் வெற்றிகரமாக அமைத்துக் கொண்ட பேச்சுப் பாணி.<br>**(எவையேனும் நான்கு கருத்துகள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 4 |
| 36 | **‘மலை, மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது’**<br>➢ மனித சமூகத்தின் ஆதிநிலம் மலை.<br>➢ சேயோன் மேய மைவரை உலகம்<br>– தொல்காப்பியம்.<br>➢ விண்பொரு நெடுவரை குறிஞ்சிக் கிழவ<br>–திருமுருகாற்றுப்படை.<br>➢ மலை நிலத்தைத் தமிழ் இலக்கியம் ‘குறிஞ்சி’ என்றே குறிப்பிடுகிறது.<br>➢ கமில் சுவலபில், திராவிடர்களை ‘மலைநில மனிதர்கள்’ என்கிறார்.<br>➢ இந்தியப் பழங்குடியினரின் பெயர்கள் மானுடப் புவிச்சூழலை வெளிப்படுத்துகின்றன.<br>➢ பழங்குடியினர் உயரமான இடத்தில் ஓடும் சிற்றாறு, ஓடைகளை ஒட்டிக் குடியிருப்பை அமைத்துள்ளனர்.<br>➢ அவை பழங்குடியினரின் மலைசார்ந்த சமூக சமயக் கூறுபாடு சார்ந்த புரிதலைத் தருகின்றன.<br>**(எவையேனும் நான்கு கருத்துகள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 4 |
| 37 | **நேரடி மொழி**<br>➢ பேச்சு என்பது தன்னைத் திறந்துகொள்கிற ஒரு செயல்பாடு.<br>➢ அது மொழியில் நீந்துவது.<br>➢ பேசும்போது நமது உடம்பின் வெளிப்பாடுகள் நம்மை மொழி என்னும் நீரில் முன்னோக்கி நகரச் செய்கின்றன. | 4 |

| | | |
|---|---|---|
| | ➢ பேச்சு மொழிக்கு ஒருபோதும் பழமை தட்டுவதில்லை.<br>➢ அது வேற்று மொழி ஆவதில்லை.<br>➢ அது எப்போதும் உயிர்ப்புடனும் மாறிக்கொண்டே இருக்கிறது.<br>➢ இதை உணர்ந்த கவிஞர்கள் சிலர் தங்களுடைய கவிதைகளை எதிரில் இருந்து பேசுவதுபோல் அமைக்கின்றனர்.<br>**( எவையேனும் நான்கு கருத்துகள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | |
| 38 | **திராவிடர்களின் மலைக் குடியிருப்புகள்**<br><br>➢ திராவிட மலைவாழ் மக்களின் குடியிருப்புகள், அப்பழங்குடியினர்தம் மலை சார்ந்த வாழ்வியலின் சமூக, சமயக்கூறுபாடுகள் குறித்த புரிதலைத் தருகின்றன.<br>➢ ஓடும் நீரையே குடிநீராகப் பயன்படுத்தினர்.<br>➢ நீலகிரி தோடர் இனத்தவர் பால் எருமைக் கொட்டில்களைப் புனித இடமாகக் கருதினர்.<br>➢ குறும்பர் மொழியில் தாழ்வாரத்தை மெட்டு என்ற சொல்லால் குறிப்பர்.<br>➢ ஆந்திரா, ஒடிசா – ஐதாப்பு திராவிட பழங்குடியினரின் குடியிருப்புகள் மலை உச்சிகளில் அமைந்துள்ளன.<br>**( எவையேனும் நான்கு கருத்துகள் எழுதியிருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)** | 4 |

**பிரிவு – 3** **3 X 4 = 12**

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

| | | |
|---|---|---|
| 39 | அ) **உருவக அணி:**<br>**அணி விளக்கம்**<br>உவமை உவமேயம் என்ற வேறுபாடு தோன்றாது இரண்டும் ஒன்றே என்று கூறுவது உருவக அணி.<br>**சான்று:**<br>இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்<br>பார்தாக்கப் பக்கு விடும்<br>**அணிப்பொருத்தம்**<br>இக்குறட்பாவில் இரத்தல் படகாகவும், கரத்தல் பாறையாகவும் உருவகப்படுத்தப்பட்டு உள்ளதால், இஃது உருவக அணி ஆயிற்று. | 4 |

| | | |
|---|---|---|
| | **(அல்லது)**<br>**உவமை அணி**<br>**அணி விளக்கம்**<br>கவிஞர் கூறக் கருதிய ஒரு பொருளை மற்றொரு பொருளோடு ஒப்பிட்டுக் கூறுவது உவமை அணி. இதில் உவமை, உவம உருபு, உவமேயம் ஆகிய மூன்றும் வெளிப்படையாக நிற்கும்.<br>**சான்று – 1**<br>மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்<br>பெருந்தகை யான்கண் படின்.<br>**அணிப் பொருத்தம்**<br>உவமை : மருந்தாகித் தப்பா மரம்,<br>உவம உருபு : அற்று,<br>உவமேயம் : செல்வம் பெருந்தகையான்கண் படின்.<br>**சான்று – 2**<br>சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்<br>சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.<br>**அணிப் பொருத்தம்**<br>உவமை : சுடச்சுட ஒளிவிடும் பொன்,<br>உவம உருபு: போல்,<br>உவமேயம்: துன்பம் சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.<br>**(பொருத்தமான சான்று இருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)** | **அணி இலக்கணம் – 2 மதிப்பெண்**<br><br>**சான்று – 1 மதிப்பெண்**<br><br>**பொருத்தம் – 1 மதிப்பெண்** |
| 40 | **இலக்கிய நயம் பாராட்டுக**<br>**மையக்கருத்து**<br>பெண்கல்வியின் அவசியத்தை வலியுறுத்தி உள்ளார்.<br>**மோனை**<br>**பெ**ண்ணுக்கு– **பே**ணி<br>**ம**ண்ணுக்குள்ளே –**மா**தர்<br>**க**ண்கள் –**கா**ட்சி<br>**பெ**ண்கள் –**பே**தமை.<br>**எதுகை** – பெ**ண்**ணுக்கு– ம**ண்**ணுக்குள்ளே –க**ண்**கள் – பெ**ண்**கள்.<br>**இயைபு** – வளர்த்**திடும்** – அற்**றிடும்**<br>**முரண்**– ஞானத்தை வைத்தான் x அறிவைக் கெடுத்தார்<br>**சந்தம்**– சிந்துப்பா<br>**அணி**–இயல்பு நவிற்சி அணி<br><br>**(மையக்கருத்துடன் எவையேனும் மூன்று ஏற்புடைய நயங்கள் எழுதி இருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)** | 1<br><br>3 |

| | | |
|---|---|---|
| 41 | **எழுத்து வடிவக் குறியீடுகள்**<br>**Unbold–** வழக்கமான எழுத்தில் மாற்றுக.<br>**Bold–** தடித்த எழுத்தில் மாற்றுக.<br>**Trs –** சொற்கள், எழுத்துக்களை இடம் மாற்றுக.<br>**I.C.–** எழுத்துருவைச் சிறியதாக ஆக்குக. | 1<br>1<br>1<br>1 |
| 42 | **புதிர்களுக்கான விடை**<br>அ) வளை<br>ஆ) கம்பு<br>இ) மை<br>ஈ) மதி | 1<br>1<br>1<br>1 |
| 43 | **தமிழாக்கம் தருக**<br>**1.**இயற்கை அழகை ரசிப்பது மனதைத் தூய்மைப்படுத்துவதற்கான முதல் படியாகும்.<br>**2.** வெற்றியாளர்கள் மாறுபட்ட செயலைச் செய்வதில்லை. செய்வதையே வித்தியாசமாகச் செய்கிறார்கள்.<br>**3.**ஒரு படம் ஆயிரம் வார்த்தைகளுக்குச் சமம்.<br>**4.** கல்வி ஓர் ஆற்றல் வாய்ந்த கருவி, இதைக்கொண்டு உலகை மாற்றலாம்.<br><br>**காது கேளாதவர்களுக்கான மாற்று வினா**<br>அ) இனிமை, பண்பாடு, அகப்பொருள், மென்மை, பாட்டு<br>ஆ) அதூஉம், தழீஇய<br>இ) (ஏற்ற கருத்து இருப்பின் மதிப்பெண் வழங்கலாம்.)<br>ஈ) தமிழ் மாலை | 1<br>1<br>1<br>1<br><br>1<br>1<br>1<br>1 |

**பகுதி – IV** **3 X 6 = 18**

| | | |
|---|---|---|
| 44 | **அ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை நாடு:**<br>➢ வடகரை நாட்டில் மலரில் மொய்க்கும் வண்டுகள், ‘இந்தளம்’ என்ற பண்ணை ரீங்காரமிட்டுப் பாடும்.<br>➢ வண்டின் இசைகேட்டு வாய்க்காலில் மதகுகளிடையே கட்டப்பட்ட சங்கிலியில் மீனைப் பிடித்து உண்பதற்காக வந்த உள்ளான் பறவை வாலை ஆட்டிக்கொண்டு அமர்ந்திருக்கும்.<br>➢ தாமரைத் தடாகத்தில் மீன்கள் துள்ளிப் பாய்ந்து விளையாடும். முத்துகளை ஈன்ற வெண்மையான சங்குகள் பரவிக் காணப்படும்.<br>➢ மின்னலையொத்த பெண்கள், பெய் என்றால் மழை பெய்யும்.<br>➢ உள்ளங்கை ஏந்தி இரந்து உண்ணும் இயல்புடைய முனிவர்கள் கூறும் வார்த்தைகள் மெய்யாகும்.<br>➢ இத்தன்மை கொண்ட திருமலையில் புலவர்கள் போற்றுகின்ற திருமலைச் சேவகன் வீற்றிருக்கின்றார். | 3 |

| | | | |
|---|---|---|---|
| | **திருமலை முருகன் பள்ளு கூறும் தென்கரை நாடு:**<br>➢ தென்கரை நாட்டின் நீண்டு வளர்ந்த சோலையில் மேகக் கூட்டங்கள் தங்கிச் செல்லும்.<br>➢ இந்நாட்டில் உள்ள பொன்னாலான மாட மாளிகைகளில் அகில் புகையின் நறுமணம் பரவிக் கொண்டே இருக்கும்.<br>➢ இம்மாளிகைகளை மயில்களும் கார்கால மேகங்களும் சூழ்ந்து காக்கும்.<br>➢ செங்கோலைக் கொண்ட மன்னர் தென்கரை நாட்டை நீதி தவறாமல் காவல் காப்பர்.<br>➢ இளைய பெண்கள் பொன்னாலான அரங்கில் நடித்து விளையாடி மகிழ்ந்திருப்பர்.<br>➢ இங்குள்ள குளங்களின் அலைகள் முத்துகளை ஏந்தி வரும். அவ்வலைகள் கரைகளில் மோதும்பொழுது முத்துகள் சிதறி வெடிக்கும்.<br>➢ இத்தன்மை கொண்ட குற்றாலத்தில் வண்டுகள் மொய்க்கும் கொன்றை மலரைச் சூடிய தென்னாடுடைய சிவபெருமானாகிய குற்றால நாதர் வீற்றிருக்கின்றார்.<br><br>**(அல்லது)**<br><br>**ஆ) "அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்"**<br>➢ நேர்வழி மாறாது அடக்கமாய் இருப்பவனின் உயர்வு, மலையின் மாண்பைக் காட்டிலும் பெரியது.<br>➢ ஒருவர் எதைக் காக்காவிட்டாலும் தன் நாவையாவது காக்க வேண்டும். அவ்வாறு காக்காவிட்டால் சொல் குற்றத்தில் சிக்கித் துன்பப்படுவர்.<br>➢ தீயினால் சுட்ட புண்ணால் உடலில் வடு உண்டானாலும் மனதில் ஆறிவிடும்; நாவினால் சுட்ட புண்ணால் புறத்தே வடு உண்டாகாவிட்டாலும் மனதில் ஆறா வடுவாய் அமைந்து துன்புறுத்தும்.<br><br>**(திருக்குறள் கருத்துகளோடு பொருத்தமான கருத்துகள் எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கலாம்)** | 3<br><br>6 | |

| | | |
|---|---|---|
| 45 | **அ) மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் உணரும் விதம்:**<br>➢ தனது எண்ணங்களைப் பிறருக்குத் தெரிவிப்பது மொழி. மொழி பேச்சுமொழி, எழுத்துமொழி என இருவகைப்படும்<br>➢ பேச்சுமொழி, திரவ நிலையில் நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்து கொள்கிறது.<br>➢ உடம்பின் ஒரு பகுதியாக இருக்கும் தொண்டையிலிருந்து எழும் சொற்கள், குரல் ஏற்ற இறக்கம், உச்சரிப்பு, வேகம், நிதானம், திருப்பிச் சொல்லுதல், மௌனம் ஆகியவற்றால் வடிவம் கொடுத்து வெளிப்படுகின்றன.<br>➢ எழுத்து மொழி உறைந்து போன பனிக்கட்டியைப் போன்ற திடநிலை கொண்டது.<br>➢ எழுத்து மொழியில் மனிதனின் கை மட்டும்தான் வேலை செய்கிறது. எதிராளி கிடையாது. பேச்சுமொழி நேரடி மொழி. எதிராளியிடம் நேருக்கு நேராய் வெளிப்படுத்தப்படுவது.<br>➢ பேச்சுமொழியில் பழமை தட்டாது. உணர்வுகளுக்குக் குறையில்லை. எப்போதும் உயிர்ப்புடன் மாறிக்கொண்டு இருப்பதைப் பேச்சு மொழியில் உணரலாம். பேச்சு மொழியே வலிமை வாய்ந்தது.<br>**(பொருத்தமான கருத்துகள் எழுதியிருப்பினும் மதிப்பெண் வழங்கலாம்)**<br>**(அல்லது)**<br><br>**ஆ) "இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்திய தமிழர்களின் வாழ்வில் இருப்பிடங்களின் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன''**<br>➢ மலை, மனித சமூகத்தின் ஆதி நிலமாகும். 'மலைநில மனிதர்கள்' எனக் கமில் சுவலபில் அழைத்த தமிழரின் பண்டைப் பதிவுகள், கடவுளையும் மலையையும் வாழ்வில் தொடர்புபடுத்துவனவாக விளங்குகின்றன. மனித சமூகத்தின் ஆதிநிலமான மலை, தமிழ் இலக்கியங்களில் குறிஞ்சி எனக் குறிக்கப்படுகிறது. திராவிடப் பழங்குடிகளின் இனக்குழுப் பெயர்கள், மலைசார்ந்த மானுடப் புவிச்சூழலை வெளிப்படுத்துகின்றன. | 1<br><br>1<br><br>1<br><br><br><br>1<br><br>1<br><br><br>1<br><br><br><br><br><br><br><br><br><br><br><br>6 |

| | | |
|---|---|---|
| | **இயற்கையோடு இயைந்த வாழ்வு**<br>➢ பழங்குடியினர், ஓடும் நீரையே குடிநீராகப் பயன்படுத்தினர். தம் குடியிருப்புப் பகுதிகளைவிட உயரமான இடங்களில் ஓடும் சிற்றாறுகள், ஓடைகளில் நீர் எடுத்துப் பருகினர்.<br>➢ மலை உச்சியில் அமைந்த பழங்குடித் தலைவரின் வீடு, வாழ்விட வடிவமைப்பு, வாழ்வியலில் உயரமான இடங்கள் செலுத்தும் தாக்கத்தைக் காட்டுகின்றன.<br>**சொல்வழக்கு**<br>➢ திராவிட மலைவாழ் மக்கள் அன்றாடம் புழங்கும் சொற்களின் தொடர்ச்சி, சிந்திக்கத் தக்கனவாகும். தென்னிந்திய மலைவாழ் மக்களிடையே மலை, மலா, மலே என்னும் சொற்கள் வழங்குகின்றன. மலை, குன்று என்னும் சொல்லாட்சி, மலை சார்ந்த மக்களிடம் வழங்குவது சிறப்பாகும்.<br><br>**மலைப் பெயர்களின் நீட்சி**<br>➢ வடமேற்கு நாடுகளில் கண்டறியப்பட்டுள்ள சான்றுகள், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் நெடுமலைகளோடு பொருந்திப் போகும் திராவிடர்களின் மலைப்பெருமிதத்தின் நீட்சியாக உள்ளன. அப்பகுதிகளில் திராவிடர் வாழ்ந்த சான்றுகளை அவை உறுதி செய்கின்றன.<br>➢ இவற்றால், இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்திய தமிழர்களின் வாழ்வில் இருப்பிடங்களின் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தமை புலப்படும். | |
| 46 | **அ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு**<br>யானை டாக்டர் – மனிதனின் கீழ்மைகள் – இயற்கை வளங்களை அழித்தல் – உயிரைப் பறித்துவிடும் – அற்புதமான படைப்பு – யானை புத்துணர்வுத் திட்டம் – அதிக ஞாபகச் சக்தி – இயற்கையைக் காப்போம்! வனஉயிரினங்களைப் பாதுகாப்போம்!<br>**(கதை வடிவில் எழுதியிருப்பின் பாதி மதிப்பெண் வழங்கலாம்)** | 6 |

| | | |
|---|---|---|
| | **(அல்லது)**<br>**ஆ) பாரதியின் இதழாளர் முகம்**<br>➢ சக்கரவர்த்தினி, இந்தியா, பாலபாரதி, யங்இந்தியா, விஜயா, சூர்யோதயம், கர்மயோகி எனப் பல இதழ்களில் பணியாற்றியுள்ளார்.<br>➢ கருத்துப்படங்களைத் தமிழ் இதழியல் துறையில் முதல்முதலாக அறிமுகப்படுத்தியவர்.<br>➢ இந்தியா, விஜயா இதழ்களில் கருத்துப்படங்களை வெளியிட்டார்.<br>➢ சித்ராவளி இதழை நடத்த விரும்பினார்.<br>➢ 'சக்ரவர்த்தினி' என்னும் தம் இதழில், குறள் வெண்பாவை எழுதிப் பெண் விடுதலைக்குப் பாடுபட்டார்.<br>➢ புரட்சியையும் விடுதலையையும் குறிக்க, 'இந்தியா' இதழைச் சிவப்பு வண்ணத்தில் வெளியிட்டார்.<br>➢ தமிழ் இதழ்களில் தமிழ் ஆண்டு, திங்கள், நாள் ஆகியவற்றை முதன்முதலாக குறித்தவர்.<br>➢ தமிழில் தலைப்பிடுவதற்கும் இவரே முன்னோடி.<br>➢ தலைப்பிடலை மகுடமிடல் என்றே கூறினார்.<br><br>**(பொருத்தமான கருத்துகள் எழுதியிருப்பினும் மதிப்பெண் வழங்கலாம்)** | 6 |

பகுதி – V 4 + 2 = 6

| | | |
|---|---|---|
| 47 | அடிபிறழாமல் செய்யுள் வடிவில் தருக. | |
| அ) | **புரட்சிக்கவி**<br>சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு<br>தேக்கியநல் வாய்க்காலும் வகைப்ப டுத்தி<br>நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்<br>நிறைஉழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள் ?<br>கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்<br>கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை ?<br>பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்<br>போய்எடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு ?<br>–பாரதிதாசன் | 4 |
| ஆ) | **திருக்குறள்**<br>இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து<br>கெடுக உலகியற்றி யான். | 2 |